பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

16 12 2024 6 30

திங்கட்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மீனவர் பிரச்சினையில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வதென இந்தியாவும் - இலங்கையும் முடிவு செய்துள்ளன.

2. மக்களவையில் நடப்பு நிதியாண்டுக்கான கூடுதல் மானியக் கோரிக்கை மீதான விவாதம் இன்று தொடங்கியது.

3. செயற்கை நுண்ணறிவுத் துறையின் முதலீடுகளுக்காக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றி வருவதாக மாநில அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

4. வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக வட கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக இளையோர் ராப்பிட் செஸ் போட்டியின் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் **Pranav Venkatesh** முதல் இடத்தில் உள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்தியா - இலங்கை இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்திடப்பட்டன.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அநுர குமார திசநாயகவுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இரட்டை வரி தவிர்ப்பு, வரி ஏய்ப்பு மற்றும் குடிமைப் பணி அதிகாரிகளுக்கான பயிற்சி போன்றவற்றில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இதில் அடங்கும்.

இந்தப் பேச்சுகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த உதவும் என்று குறிப்பிட்டார்.

மீனவர் பிரச்சினை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினையில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வது என பரஸ்பரம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், அடுத்த இரு தினங்களுக்குள் தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றார்.

<<<<>>>>

தமிழகத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகளை திறக்கவும் மாணவர் சேர்க்கைகக்கான இடங்களை அதிகரிக்கவும் திமுக அரசு தவறிவிட்டதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவர் சேர்க்கை இடங்களுக்கான பட்டியலில் தேசிய அளவில் இரண்டாவது இடத்தில் இருந்த தமிழகம், தற்போது 3வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் எந்தவொரு புதிய மருத்துவக் கல்லூரியும் திறக்கப்படாததே இதற்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மருத்துவக் கல்வி கட்டமைப்பை மேம்படுத்துவதில் தமிழக அரசின் இந்த அணுகுமுறை கண்டிக்கத்தக்கது என்றும் திரு. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புத்தாண்டு பிறப்பதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், சிவகாசியில் காலண்டர் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

800க்கும் மேற்பட்ட அச்சகங்களில் இப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், 350 கோடி ரூபாய் அளவுக்கு காலண்டர் வர்த்தகம் நடைபெறுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ககன்யான் திட்டத்திற்கு தேவையான C-20 கிரையோஜனிக் எஞ்சினின் முக்கிய சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக இஸ்ரோ கூறியுள்ளது.

கிரையோஜனிக் பரிசோதனையில் முக்கியமான மைல்கல் இது என்று மொஹாலியில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. க.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவுத் துறையில் முதலீடுகளுக்காக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றி வருவதாக மாநில அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

கோவையில் தனியார் செயற்கை நுண்ணறிவு சிறப்பு மையத்தினை இன்று திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக தாம் பொறுப்பேற்ற பின்னர், மாதந்தோறும் வெளிநாடுகளுக்கு சென்று தமிழகத்திற்கு நிறுவனங்களை ஈர்த்து வருவதாகவும் திரு. பழனிவேல் தியாகராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

மழை வெள்ள நிவாரணத்திற்காக போராடுபவர்களை காவல்துறையினர் கைது செய்வது கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி கூறியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூரில் நிவாரணம் கோரி போராடிய மக்களை காவல்துறையினர் பலவந்தமாக கைது செய்ததாக தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மக்களவையில் நடப்பு நிதியாண்டுக்கான கூடுதல் மானியக் கோரிக்கை மீதான விவாதம் இன்று தொடங்கியது.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதைவிட கூடுதலாக 87 ஆயிரத்து 762 கோடி ரூபாயை ஒதுக்க இந்த மானியக் கோரிக்கை வகை செய்கிறது.

இதன் மீதான விவாதத்தை காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே.சி. வேணுகோபால் தொடங்கி வைத்துப் பேசினார்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் சம்பளம் கடந்த சில ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பணவீக்கம் அதிகரித்து வருவதாகவும் திரு. கே.சி. வேணுகோபால் குறை கூறினார்.

பிஜேபி உறுப்பினர் டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால் பேசுகையில், கூடுதல் மானியக் கோரிக்கையில் 25 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் நலனுக்கானது என்று குறிப்பிட்டார்.

4 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் ஏழை விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 3 லட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஆவின் நிறுவனத்தின் பால் விற்பனை 7 லட்சம் லிட்டர் அதிகரித்துள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய வகையான க்ரீன் மேஜிக் ப்ளஸ் பால் சோதனை அடிப்படையில் சில ஒன்றியங்களில் மட்டும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப இந்த பால் விற்பனை செய்யப்படும் என்றும், தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் அனைத்து வகையான பாலின் விற்பனை அளவு குறைக்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் ஏரியில் மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே மழை வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட நல்லி கிராமத்தில் மாநில அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

திருவள்ளூர் மாவட்டம் ஆரணியில் புதிய பேருந்து சேவையை மாநில அமைச்சர் திரு. நாசர் இன்று தொடங்கி வைத்தார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாளான 24ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஈடாக 28ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்று ஆட்சியர் திருமதி அழகுமீனா கூறியுள்ளார்.

-------------

நாமக்கல் மாவட்டத்தில் கோமாரி தடுப்பூசி முகாமை ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு செய்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் இன்று வழங்கினார்.

-------------

தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக 220 வீடுகள் சேதமடைந்துள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் கூறியுள்ளார்.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் காவல்துறையின் செயல்பாடுகள் குறித்து மத்திய மண்டல காவல்துறைத் தலைவர் திரு. கார்த்திகேயன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற இந்தியாவின் குகேஷ் சிங்கப்பூரில் இருந்து இன்று சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குகேஷ், உலக சாம்பியன் ஆக வேண்டும் என்பது சிறுவயது முதலே தமது கனவாக இருந்தது என்றும், தற்போது அது நிறைவேறி உள்ளதாகவும் கூறினார்.

--------------

உலக இளையோர் ராப்பிட் செஸ் போட்டியின் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் **Pranav Venkatesh** முதல் இடத்தில் உள்ளார்.

ஸ்லோவேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர், ஆறரை புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

--------------

இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று 7 விக்கெட் இழப்புக்கு 405 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா 445 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Travis Head** 152 ரன் எடுத்தார்.

பும்ரா அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆடிய இந்தியா, 4 விக்கெட் இழப்புக்கு 51 ரன் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது.

இதன் பின்னர் போதிய வெளிச்சமின்மை காரணமாக இன்றைய ஆட்டம் முன்கூட்டியே முடித்துக்கொள்ளப்பட்டது.

-------------

ஆசிய ஜூனியர் மகளிர் ஹாக்கி கோப்பையை வென்ற இந்திய அணி, மஸ்கட்டில் இருந்து இன்று பெங்களூரு திரும்பியது.

விமான நிலையத்தில் இந்திய வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலகக் கோப்பை கோகோ சாம்பியன் போட்டி புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக நடைபெற உள்ள இந்த உலகக் கோப்பை போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியா உட்பட 24 நாடுகள் பங்கேற்கின்றன.

இப்போட்டி அடுத்த மாதம் 13ஆம் தேதி தொடங்கி 19ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**<<<<The End>>>>**